# பாரதியும் சுதந்திரமும்

## குறிப்புச்சட்டகம்

- முன்னுரை
- பிறப்பு
- பாரதியும் இந்திய விடுதலையும்
- விடுதலை போராட்டத்தில் பாரதியாரின் பங்கு
- பாரதியின் சுதந்திர தாகம்
- முடிவுரை

## முன்னுரை

நம் இந்திய தேசமானது ஆங்கிலேயர்களிடம் அடிமைப்பட்டு கிடந்த போது இந்திய தேசத்தின் விடுதலைக்காக பல தமிழர்கள் உதயம் ஆனார்கள். அவர்களுள் தமிழகத்தின் மக்களைக் கவி பாடி தன் கவி வரிகளால் விடுதலை உணர்வை ஊட்டி அவர்களது உள்ளப்பூட்டை திறந்தவர் பாரதி என்றால் அது மிகையல்ல. பாரதியின் விடுதலை உணர்வு பற்றி நான் விழைந்த கருத்துக்களைக் காண்போம்.

## பாரதியின் பிறப்பு

சுப்பிரமணிய பாரதியார் 1882ஆம் ஆண்டு சின்னசாமி ஐயருக்கும், இலட்சுமி அம்மாளுக்கும் மகனாகத் தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எட்டயப்புரத்தில் பிறந்தார். இவரது இயற் பெயர் சுப்ரமணியன் ஆகும். தன்னுடைய பதினொறாவது வயதில் கவிபாடும் ஆற்றலை வெளிப்படுத்தினார். இவர் தனது விடுதலை உணர்வுகளைக் கவி வரிகளால் வெளிப்படுத்தினார்.

## பாரதியும் இந்திய விடுதலையும்

தூங்கிக் கிடந்த பாரதத்தைத் தம் உணர்ச்சிகரமான பாட்டுகளால் தட்டி எழுப்பிய பெருமை பாரதிக்கு உண்டு. நாட்டின் ஒற்றுமை, அதனால் ஏற்படும் பலன், விடுதலை பெற வேண்டியதன் தேவை ஆகியவற்றையும் பாரதி பாடினார். இந்திய விடுதலை பெறுவதற்கு முன்னரே விடுதலையைப் பற்றி கனவு கண்டார் மகா கவி பாரதியார்.

**“ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே ஆனந்த**

**சுதந்திரம் அடைந்து விட்டோம்” என்று பாடினார்.**

## விடுதலை போராட்டத்தில் பாரதியின் பங்கு

இந்திய சுதந்திரப் பேராட்ட காலத்தில் கனல் தெறிக்கும் விடுதலை கவிதைகள் வாயிலாக மக்களின் மனதில் விடுதலை உணர்வை ஊட்டிய சுதந்திரப் போராட்ட தீ அவருக்குள் காட்டுத் தீயாய் சுதந்திரக் கனலாய் பற்றி எரிந்தது. அதை தனது பத்திரிக்கை, இலக்கியம், பாட்டு மற்றும் கவிதை வடிவில் விடுதலை உணர்வை அவர் மக்களிடையே ஏற்படுத்தினார். விடுதலைப் போராட்டக் காலத்தில் தேசிய உணர்வுள்ள பல்வேறு கவிதைகளைப் படைத்து மக்களை ஒருங்கிணைத்த காரணத்தால் பாரதி 'தேசிய கவி' என அனைவராலும் போற்றப்பட்டார். எரிமலை டித்தது போன்ற தனது எழுத்துக்களால் விடுதலை தாகத்தை மக்களுக்கு ஊட்டியவர் என்ற பெருமை பாரதியாரைச் சாரும்.

## முடிவுரை

பாரதியார் 1921 செப்டம்பர் 11ம் தேதி தனது 39வது வயதில் இவ்வுலக வாழ்விலிருந்து விடுதலைப் பெற்றார். அவர் உலகை விட்டு நீங்கினாலும் அவரால் ஏற்படுத்தப்பட்ட விடுதலை உணர்வுகளை அவரது பாட்டு வரிகள் என்றென்றும் நமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கும். பாரதி காட்டிய வழிகளைப் பின்பற்றி வேற்றுமையை விடுத்து ஒற்றுமையுடன் சுதந்திர இந்தியாவின் வளர்ச்சியைக் காண்போம்.


கா.ராஜேஸ்வரி

முதலாமாண்டு தமிழ்துறை